SS PRITHVI
PRIT-EDUCATION
CLICK FOR MORE

www.Padasalai.Net www.TrbTnpsc.com

வகுப்பு : 12

பதிவு எண்

# முதல் திருப்புதல் தேர்வு - ஜனவரி - 2024

## தமிழ்

நேரம் : 3.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I

குறிப்பு : அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14X1=14

ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. 'மீண்டும் அந்தப் பழமை நலம் புதுக்குதற்கு' கவிஞர் குறிப்பிடும் பழமை நலம்.

க. பாண்டியனின் சங்கத்தில் கொலுவிருந்தது.

உ. பொதிகையில் தோன்றியது

ங. வள்ளல்களைத் தந்தது

அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி

இ) ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி

2. கடந்த 110 ஆண்டுகளில் மிகவும் வெப்பமான ஆண்டாக இந்திய வானிலை ஆய்வுத்துறை அறிவித்த ஆண்டு

அ) 2019 ஆ) 2018 இ) 2009 ஈ) 2008

3. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக்கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது.

அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழைமேகங்கள் இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

4. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

அ) உரிமைத்தாகம் - 1. பாரசீகக் கவிஞர்

ஆ) அஃறிணை - 2. பூமணி

இ) ஜலாலுத்தீன் ரூமி - 3. பக்தவச்சல பாரதி

ஈ) தமிழர் குடும்ப முறை - 4. சாகித்திய அகாதெமி

அ) 2 4 3 1 ஆ) 3 4 1 2 இ) 2 4 1 3 ஈ) 2 3 4 1

5. தாழ்கடல் - இச்சொல்லின் இலக்கணக் குறிப்பு

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

6. காவினெம் கலனே: சுருக்கினெம் கலப்பை - இத்தொடரில் கலன் உணர்த்தும் பொருள்.

அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண் கருவி

7. வெண்பாவின் இலக்கணம்.

கருத்து 1 : ஈற்றுச்சீர் நாள், மலர் காசு, பிறப்பு ஆகிய வாய்பாடுகளுள் ஒன்றைக் கொண்டு முடியும்.

கருத்து 2 : ஈற்றயலடி முச்சீராகவும் ஏனையவை நாற்சீராகவும் வரும்.

அ) கருத்து 1, 2 சரி ஆ) கருத்து 1, 2 தவறு

இ) கருத்து 1 மட்டும் சரி ஈ) கருத்து 2 மட்டும் சரி

8. விளியறி ஞமலி - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?

அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

SS PRITHVI
PRIT-EDUCATION
CLICK FOR MORE


பொருந்தா இணையைத் தேர்க. பாவகை

அ) விருத்தப்பா - நாலடியார்

ஆ) ஆசிரியப்பா - அகநானூறு

இ) கலிவெண்பா - தூது

ஈ) குறள் வெண்பா - திருக்குறள்

10. 'ஒற்றைக் கோணக்கலை' என்று அழைக்கப்படுவது.

அ) நாடகம் ஆ) உரைநடை இ) இலக்கணம் ஈ) பரத நாட்டியம்

11. கீழ்கண்ட நூல்களில் வெ.இறையன்பு எழுதிய நூல்

அ) ஒரு கிராமத்து நதி ஆ) நீர்வெளி இ) தேன் மழை ஈ) வாய்க்கால் மீன்கள்

12. ச.த.சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல்

அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும்

இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்துவமும் தமிழும்

13. கூற்று : 19 ஆம் நூற்றாண்டில் குறியீட்டியம் ஓர் இலக்கியக் கோட்பாடாக உருப்பெற்றது.

காரணம் : போதலேர், ரைம்போ, வெர்லேன், மல்லார்மே முதலானவர்கள் குறியீட்டியத்தை வளர்த்தவர்கள்.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று சரி, காரணம் சரி

இ) கூற்று தவறு, காரணம் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி

14. அல்லல் படுப்பதூஉம் இல் – எவரோடு பழகினால்?

அ) வாள் போல் பகைவர் ஆ) செய்ப்பொருள் காண்பவர்

இ) எண்ணியாங்கு எய்துவர் ஈ) தீயினத்தார்

SS PRITHVI

பகுதி – II

பிரிவு–1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x2=6

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

16. எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும் – யார்க்கு?

17. இராமலிங்க அடிகளார் இயற்றிய நூல்கள் யாவை?

18. புறநானூறு குறிப்பு வரைக.

Padasalai.Net

பிரிவு–2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x2=4

19. 'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' என்னும் முழக்கத்தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?

20. 'வேத்தான்' - என்பதற்கு உ. வே. சா தரும் விளக்கத்தை எழுதுக.

21. 'விரிபெரு தமிழர் மேன்மை, ஓங்கிடச் செய்வ தொன்றே

உயிர்ப்பணியாகக் கொண்டோன்' யார், யாரைப்பற்றி, எதற்காகக் கூறுகிறார்?

பிரிவு–3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7x2=14

22. 'உள்ளங்கை நெல்லிக்கனிபோல' என்ற உவமைத் தொடரை சொற்றொடரில் அமைந்து எழுதுக.

23. விலை, விளை, விழை - ஆகிய மயங்கொலிச்சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

24. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி செல்வதனை கண்டு ஒன்றும் செய்வதறியாது துன்புறுவாய் நிறைய தன்னம்பிக்கை கொள்.


Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

SS PRITHVI
PRIT-EDUCATION
CLICK FOR MORE


…விகுதிகள், பல விகுதி என்றால் என்ன?

26. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
இன்னிக்கு சாயங்காலம் வடை போட்டி நடைபெறும்.

27. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு, நீயும் புரிஞ்சுக்கோ.

28. ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக.
அ) அறிந்து ஆ) அருந்து

29. மரபுப்பிழைகளை நீக்கி எழுதுக.
வன விலங்குக் காப்பகத்தில் சிங்கக்குட்டியும் யானைக் குட்டியும் கண்டேன்.

30. தொன்மம் – விளக்கம் தருக.

## பகுதி – III

### பிரிவு–1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x4=8

31. ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும் – இடம் சுட்டி விளக்குக?

32. இல்வாழ்க்கை சிறப்புற அறநெறியோடு வாழ்தலின் முக்கியத்துவத்தை வள்ளுவர் வழி நின்று விளக்குக.

33. மாதவியின் நாட்டியப்பயிற்சி மற்றும் அரங்கேற்றம் செய்த அவையுடன் ஒத்திருந்தவர் பற்றி விளக்குக.

34. கொடை வழங்குதலில் நீங்கள் பின்பற்ற விரும்புவனவற்றை எழுதுக.

### பிரிவு–2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8

35. பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்கம் தருக.

36. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க?

37. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் – சென்னையைப் பற்றி உமது பார்வையை எழுதுக.

38. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

### பிரிவு–3

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3x4=12

39. அ) உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடனுறைந் தற்று.
– இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக?

(அல்லது)

ஆ) பொருள் வேற்றுமை அணியை விளக்குக.

40. பரிசில் துறையை சான்றுடன் விளக்குக? (அல்லது) நெய்தல் திணையைச் சான்றுடன் விளக்குக?

41. இலக்கிய நயம் பாராட்டுக.

அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்
அவ்வாறே வான்கண்டேன், திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுகத்தோ நிலவோ நீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகையெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ?

– பாரதிதாசன்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

SS PRITHVI
PRIT-EDUCATION
CLICK FOR MORE


In terms of human development objectives. Education is an end in itself not just a means to an end. Education is a basic human right. It is also the key which opens many economic

Social and political doors for people. It increase access to income and employment opportunities. Educating People is worthy goal in itself irrespective of he economic rates of return

42.காது கேளாதவர்களுக்கான மாற்று வினா:

கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

இந்தோ – சாரசனிக் கட்டடக்கலை என்பது முகலாயக் கட்டடக்கலை, பிரித்தானியக்கட்டடக்கலை, இந்தியப் பாரம்பரிய பாணி ஆகியவற்றைக் கலந்து உருவாக்கப்பட்டது. இப்பாணியில் 1768 – இல் கட்டி முடிக்கப்பட்ட முதல் கட்டடம் சேப்பாக்கம் அரண்மனையே ஆகும். சென்னையின் புகழ்பெற்ற கட்டடங்களான மத்தியத் தொடர் வண்டி நிலையம், எழும்பூர் தொடர்வண்டி நிலையம், பொது அஞ்சல் அலுவலகம் ஆகியன சாரசனிக் கட்டடக்கலையின் சிறப்புகளை நமக்குக் காட்டுகின்றன.

வினாக்கள் :

அ) இந்தோ – சாரசனிக்கட்டடக்கலை என்பது எவ்வெவற்றை கலந்து உருவாக்கப்பட்டது.

ஆ) சேப்பாக்கம் அரண்மனை கட்டப்பட்ட ஆண்டு எது?

இ) இந்தோ – சாரசனிக்கட்டடக்கலை பாணியில் கட்டி முடிக்கப்பட்ட கட்டடம் எது?

ஈ) இந்திய – சாரசனிக் கட்டடக்கலையை பறை சாற்றும், கட்டங்களுக்கும் எடுத்துக்காட்டுத் தருக?

43.பின்வரும் பழிமொழியினை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

(அல்லது)

யானைக்கும் அடிசறுக்கும்

SS PRITHVI

பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3x6=18

44.(அ) செய்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

(அல்லது)

ஆ) கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விளிக்க.

45. அ) பண்டையகாலக்கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக.

46.அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிபற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விளிக்க.

(அல்லது)

ஆ) கோடைமழை கதை வாயிலாக விளக்கப்படும் மனித நேயப்பண்புகளை விளக்குக.

பகுதி – V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக. 4+2=6

47. அ) "துன்பு உளது எனின்" தொடங்கும் கம்பராமாணயப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'தொடர்பு' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com